மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆலங்குடி

அசல் வழக்கு எண். **249/2018**

2024-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 05 -ஆம் நாள் 1872ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின்படி வாதி பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சுந்தரம்பாள் | தந்தை/கணவர் பெயர் | வீரமுத்து |
| கிராமம் | : | இம்னாம்பட்டி | தாலுகா | ஆலங்குடி |
| சமயம் | : | இந்து | மாவட்டம் | புதுக்கோட்டை |
| வயது. | : | 46 | தொழில் | கூலிவேலை |

நாள் : 05.12.2024

வா.சா. 2

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் 2ஆம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னவைதான். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. வழக்கு சொத்து பாதை புல எண்.192/2024க்கு ஆலங்குடி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட மேலெழுத்து அசல் வா.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. வழக்கு சொத்து பாதை புல எண்.192/15Eஇன் சிட்டா கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. நான் குடியிருக்கும் நத்தம் புல எண்.192/15இன் நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேட்டின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. நான் குடியிருக்கும் வீட்டின் வீட்டு வரி ரசீதுகள் அசல் (4 எண்ணிக்கை) வா.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. நான் குடியிருக்கும் வீட்டின் மின்கட்டண ரசீதுகள் அசல் (8 எண்ணிக்கை) வா.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. வழக்கு சொத்தின் புலப்பட நகல் வா.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 23.11.1998 தேதியிட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 13.10.2016 தேதியிட்ட பிரதிவாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.8ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 13.10.2016 தேதியிட்ட பிரதிவாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.9ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நீதிமன்ற ஆவணங்கள்:

1. 25.01.2017 தேதியிட்ட நீதிமன்ற ஆணையரின் இடைக்கால அறிக்கை நீ.ம.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 02.01.2018 தேதியிட்ட நீதிமன்ற ஆணையரின் இறுதி அறிக்கை நீ.ம.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்குரையில் கண்டுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )